456

உ

குருவே துணை.

# மதுரைப்பாக்கத்துப்

# பதிகங்கள்.

OFFICE OF THE REGISTRAR
3-AUG 191
MADRAS

இவை
மஹான் வண்ணச்சரபம்
ஸ்ரீமத் - தண்டபாணிசுவாமிகளாலும்
ஷை சுவாமிகள் குமாரர்
செந்திநாயகம் பிள்ளையாலும்
இயற்றப்பட்டு.

மதுரைப்பாக்கம் கம்பத்தம்
லக்ஷுமிநாராயணரெட்டியாரவர்கள்
பொருளுதவியால்
...கைரம் அச்சுக்கூடத்தில்
...ச்சிட்டு
...பிஷேககாலத்தில்
...ப்பட்டன.
...கடகரவி.

O2:58·21195
N15
179710

உ

குருவே துணை.

# மதுரைப்பாக்கத்துப் பதிகங்கள்.

OFFICE OF THE REGISTRAR OF ... 3 - AUG 1916 MADRAS.

இவை

மஹான் வண்ணச்சரபம்

ஸ்ரீமத் - தண்டபாணிசுவாமிகளாலும்

ஷை சுவாமிகள் குமாரர்

செந்தினாயகம் பிள்ளையாலும்

இயற்றப்பட்டு.

மதுரைப்பாக்கம் கம்பத்தம்

லக்ஷுமிநாராயண ரெட்டியாரவர்கள்

பொருளுதவியால்

கலாரத்திநாகரம் அச்சுக்கூடத்தில்

அச்சிட்டு

ஷை மண்டலாபிஷேககாலத்தில்

வெளியிடப்பட்டன.

நள ஷு கடகரவி.

179710

894.8111

உ

குருவேதுணை.

# முகவுரை.

மதுரைப்பாக்கம், என்பது சைவசமயாசாரியர் பாடல்பெற்ற நடுநாட்டுச்சிவதலங்களிலொன்ருகிய புறவார் பனங்காட்டூருக்குக் கிழக்கே ஐந்துமைல் தூரத்திலுள்ள மத்திமத்தலம், இத்தலத்திலுள்ள சிவாலயமானது நெடுங்காலமாக மங்கியிருந்தது. சென்ற இருபத்தெட்டு வருடங்களுக்கு முன் அங்கு அறநெறி வழுவாது இல்லறம் நடத்திவந்த ம-ள-ள-ஸ்ரீ துரைசாமி ரெட்டியாரவர்கள் ஸ்ரீ கந்தக் கடவுளின்றிருவருட் செல்வராயவதரித்து விளங்கிய திருப்புகழ்ச் சுவாமிகளென்றும், முருகதாச சுவாமிகளென்றும் வழங்குகிற மஹான் - வண்ணச்சரபம் ஸ்ரீலஸ்ரீ தண்டபாணிசுவாமிகளைத் தன் வீட்டிலழைத்துவந்து, உபசரித்து வைத்திருந்தனர். அக்காலத்தில் சுவாமிகள் அவ்வூரிலுள்ள வீரபத்திரமூர்த்தி ஆலயத்துக்கும், விஷ்ணுமூர்த்தி ஆலயத்துக்கும் சென்று அருந்தமிழ்ப்

பதிகங்கள்பாடித் துதித்து அரங்கேற்றி யிருந்தனர். அப்போது ஷ துரைசாமி ரெட்டியாரவர்கள் தனக்குக் குழந்தையில்லையென்ற குறையைச் சுவாமிகளிடம் விண்ணப்பித்துக்கொண்டபோது, சுவாமிகள் அவரைப்பற்றித் தியானகாலத்திற் சிந்தித்துக் கீழ்க்கண்ட கவியைச்சொல்லியருளி, இங்குள்ள சிவாலயத்தைக் கட்டிப் பூசைநடத்தித் தடாகமொன்றும், செய்துவைத்தால் பெண்ணொன்றும் ஆணொன்றும் பிறக்குமென்றும், கலைமகள் வாக்கென்றும் கூறினர் அதாவது,

“ சாம்பசிவ ரெட்டியபன்பிற்
றந்ததுரைசாமிரெட்டி
யாம்பன்மலர் வாவியொன்று
மாலயமொன்றுஞ் செய்தாற்
காம்பவிர்தோட்கன்னியொன்றுங்
காளையொன்றும் பெற்றிடுவ
னம்பகர்ந்ததல்லவிது நாமடந்தை
சொன்னதுவே ”

என்ற கவியைச் சொல்லித் திருநீறளித்துத் திருவாமாத்தூ ரடைந்தனர். ஷ ரெட்டியாரவர்

கள் அவ்வுத்தரவை யேற்றுக்கொண்டு சிவால யத்தை யதிக விரைவாகச்செய்து முடிக்குங் காலத்தில் ஈசுரானுக்கிரகத்தால் ஒரு அரிய புத் திரி சந்தானத்தைப்பெற்றுக் களித்துப் பிராப்த வசமாய்ச் சிவபதவி யடைந்தனர்.

பின்பு அந்தப் புத்திரியை விவாக முடித் துக்கொண்டு அந்த மதுரைப்பாக்கத்திலேயே தங்கியிருந்து, அவ்வாலய குடும்ப தருமபரிபால னஞ்செய்து வருகிற, ம-ள-ள-ஸ்ரீ இராதாபுரம் - லக்ஷ்மி நாராயண ரெட்டியாரவர்கள், அந்தச் சிவாலயத்தில், விக்கினேஸ்வர சுப்பிரமணிய நவக்ரஹாதி ஆலயங்களும், சந்நிதானத்தில் கலி யாண சபாமண்டபத் திருப்பணி முதலானவை களுஞ் செய்துமுடித்து நாளது நளஹூ ஆனிமீ ருவ ல் மஹா கும்பாபிஷேகமும் நடத்தினர். அத்தருணம் ஸ்ரீ விசுவநாதர் என்ற திருநாமத் துடன் அங்கு விளங்கும், பரமசிவனுக்கொரு பதிகமும், அம்மன் பஞ்சகமும், முருகன் சந்தக் கவியும், கும்பாபிடேக வெண்பாவும், வாழியும், என்னு லியற்றப்பட்டன. இப்போது சந்தர்ப்ப நோக்கி யிவைகளை முன்னும், முந்தியபதிகங்

களைப் பின்னுமாக ஷை ரெட்டியாரவர்களின் பொருளுதவிகொண்டு அச்சிட லாயினேன். விசாலாக்ஷிசமேத ஸ்ரீ விசுவநாத மூர்த்தியெல்லோருக்கும் மங்கள முண்டாக்குவாராக. சுபம்.

இப்படி

தி. மு. சேந்திநாயகம் பிள்ளை.

## கும்பாபிடேக வெண்பா.

நளவருடத் தானியைந்தின் ஞாயிறுத்தி ராட
முளசிம்ம லக்கினத்தி லோவா-வளமதுரைப்
பாக்கத்தி லீசன்கும் பாபிடே கந்தெரிசித்
தாக்கமிகுந் தோர்க்களவின் றும்.

குருபாதமேகதி.

உ

சிவமயம்.

# பதிகம்.

## காப்பு.

### நேரிசை வெண்பா.

மாமதுரைப் பாக்கத்து வாழுஞ் சிவன்மீது
தேமதுரச்செந்தமிழ்ப்பாச்செப்பவே-யேமநிறக்
கொன்றையணிந் தைந்துகரங் கொண்டுநிகழ் கு
ஞ்சரக்கன்[றைமற வேனிதயத் துள்.

### அறுசீர் விருத்தங்கள்.

திங்கள்புனை செஞ்சடிலச் சிவனேபெச்
சமயத்துந் தெய்வமாகி
யங்கவர்தம் பாவனையொத் தவிர்வனெனுந்
தவத்தினரு டமையச்செய்வாய்
கங்கணமாப் பாம்பணிந்த கரமுடையாய்
மதன்பொடியக் கனன்றகண்ணுய்
செங்கமலத் தடங்கள்பல திகழ்மதுரைப்
பாக்கத்துச் சிவபிரானே. (க)

வானகத்துத் தேவர்பெரு வாழ்வும்வெறுத்
துனைக்கருதும் வல்லோர்க்கன்றி
யீனமனத் தொழில்வசப்பட் டுழலுமெனக்
குனதருட்சீ ரீவாய்கொல்லோ
மானனைய விழியுமையாள் வளருமிடப்
பாகமுள வள்ளால்வாசத்
தேனவிழ்க்கு மலர்ச்சோலை செறிமதுரைப்
பாக்கத்துச் சிவபிரானே. (உ)

கல்லதனு லெறிந்தாற்கும் பிரம்புவில்லா
லடித்தார்க்குங் கருணைசெய்தாய்
சொல்லதனுற் றுதிக்குமெனைச் சோதனைசெய்
யாதருளிற் றேய்த்தாட்கொள்வாய்
வல்லரண மூன்றெரித்த நகையுடையா
யைந்தொழிலும் வயங்குமாண்பாற்
றில்லைநகர்க் கூத்துகந்தாய் திறன்மதுரைப்
பாக்கத்துச் சிவபிரானே. (ங)

சிந்தனையி லுனைக்கருதி வாயதனு
லுனைத்துதித்துத் தேகத்தாலே
சந்ததமுன் பணிபுரியும் பேறெனக்குத்
தரவுளத்திற் சற்றுநாடாய்

கந்தணியுங் கரத்தாற்கு நான்முகற்குங்
காணரிய நம்பாநாளுஞ்
செந்தமிழ்ப்பா வலர்பரவுஞ் சீர்மதுரைப்
பாக்கத்துச் சிவபிரானே. (௪)

காலன்விழ வுதைத்ததிருப் பதமுடைய
வுனைத்தினமுங் கருதுவோரும்
பாலனைய தமிழ்கொடுனைத் துதிப்போரு
மேலான பதத்தரன்றோ
கோலமொன்றைத் தொடர்ந்தெயின வடிவொ
டுபோய் விசையனுளங் குறித்ததீந்தாய்
சீலமறைத் தொனிபெருகுஞ் செயமதுரைப்
பாக்கத்துச் சிவபிரானே. (௫)

சாவவுயிர் வதைப்போருந் தசைநுகருங்
கொடியோருந் தரணியூடு
பாவவிதை யனையவரென் றஞ்சியுனை
யடைந்தேனைப் பரிந்தாள்வாயோ
காவகத்திந் திரன்முதலோர் சுகமுறவேற்
குகனைநுதற் கண்ணாற்பெற்றாய்
சீவகருணையிற்சிறந்தோர் சேர்மதுரைப்
பாக்கத்துச் சிவபிரானே. (௬)

பாலுறழ்வெண் ணகைமடவார் மயற்கடலிற்
சுழன்றலையும் பண்பினேற்குச்
சாலுமகத் துவந்திகழெண் சித்தியுமெய்
முத்தியதுந் தந்தாட்கொள்வாய்
நாலுதிசைப் பதியினருந் தினம்புகழும்
பெருமைகொண்டு நறைப்பூங்காவுஞ்
சேலுகளும் பணைவளமுந் தெரிமதுரைப்
பாக்கத்துச் சிவபிரானே. (எ)

பாடல்வனைந் தேத்துமொரு புலவன்விடுந்
தூதாயும் பரவையார்பா
லூடலறுத் தருளியநீ தமியேன்றன்
பறச்சிறிதின் றுதவொண்ணாதோ
வாடலிலாக் கொன்றையறு கணிசடிலப்
பரமாநல் வாய்மையாலே
சேடனுரைப் பினுமமையாச் செயன்மதுரைப்
பாக்கத்துச் சிவபிரானே. (அ)

பாதகங்கள் பலபுரிந்தோ ராஞலு
முனையன்பிற் பணிந்துபோற்றும்
போதமுடைப் பெரியரைச்சேர்ந் திடிற்கதியெய்
திடுவரெனல் பொய்யன்றன்றே

காதணியாச் சங்கணியுங் காரணனே
நாரணனுங் கமலத்தோனுஞ்
சேதமுறா தநுக்கிரகஞ் செயுமதுரைப்
பாக்கத்துச் சிவபிரானே. (கூ)

வந்தடைந்தார் விரும்புபல வரங்களுந்தந்
திடுங்கருணை வள்ளலுன்போ
லெந்தவுல கினுமிலையென் றுணர்ந்தடுத்தேற்
கொருசிறிதின் றிரங்கியாள்வாய்
சந்தநயப் புலவர்களு மறையவரு
மாதவருஞ் சைவர்தாமுஞ்
சிந்தைமகிழ் திருக்கோயிற் றிருமதுரைப்
பாக்கத்துச் சிவபிரானே. (கo)

முற்றிற்று.

## முருகன் சந்தக்கவி.

தனனத்தாத் தத்தனதானன-தனதானா.

கனகக்கோட் டிக்கிணை யாகிய-முலைமாதர்
கலவிக்கேக் கற்றுழல் வாரிடை-பழகாதே
யனகப்பாச் செப்பிய பாவலர்-தொழுமாறே
யருமைக்கூத் துச்சிகி மீதெதிர்-வருவாயே
பனகப்பாய்ப் பச்சுடன் மாயவன்-மருகோனே
பரணிற்காட் டிற்றதொர் வேடமின்-மணவாளா
வனசத்தாற் குட்டிய நாள்சிறை-யிடுவோனே
மதுரைப்பாக் கத்தினின் மேவிய-பெருமாளே.

உ

தேவிசகாயம்.

# சத்திபஞ்சகம்.

## காப்பு.

வெண்பா.

பத்தியுடனேமதுரைப்பாக்கத்திலீசனருட் [ம்
சத்திபஞ்சகப்பநுவல்சாற்றுவதற் - கெத்திசையு
போற்றும்புகர்முகத்துப்புங்கவன்றன் பொற்பது
காற்றுணேயேநீங்காதகாப்பு. [மக்

---

மதுரைப்பாக்கப்பதியில்வாழும்விசாலாட்சி
பதுமத்தாட்கேயடிமைப்பட்டோர்-முதுசொர்க்
வாழ்வும்வெறுத்துமறுபிறப்பில்லாக்கதியிற் [க
ருழ்வறவாழ்வார்சந்ததம். (க)

## கட்டளைக்கலித்துறை.

சந்ததமுன்றனேயெண்ணித்துதிக்குமெய்ச்
சற்சனரு
டந்தமிலானந்தவாழ்விற்குலாவுநல்
லன்புதந்தாள்

179710
-600 0
02:58:21
N

கந்தன்விநாயகனென்றிருமக்களைக்
காதலினாற்
றந்தநல்லாய்மதுரைப்பாக்கக்கோயிற
றனிப்பரையே. (உ)

## சந்தக்கவி.

தனதன தத்தாத் தத்தன-தனதாண.

பரமனிடப்பாற்சத்திய-வடிவாநீ
பழுதில்களிப்பாற்பத்தன்முன்-மகள்போலே
வரல்வினவிப்போற்றித்தொழு-மடியேனேர்
மனவொருமைப்பாட்டைத்தர-வருவாயே
கரமலரிற்பூப்பற்றிய-மயில்போல்வாய்
கனகநகர்க்காப்புற்றவர்-தொழுமாதே
சிரபுரமுற்றுற்கத்தின-மமுதீவாய்
திருமதுரைப்பாக்கத்துறை-யுமையாளே.(ங)

## இரட்டையாசிரியம்.

ஆளாகியுன்றனைவணங்கிடுமெயன்பினர்க்
கணிமாமுதற்குலாவு
மட்டமாசித்தியும்பிறவாததனிவீடு
மமையக்கொடுக்குமுன்சீர்

கேளாமலிவ்வுலகவாதனைச்செயல்களே
கேட்டிடுஞ்செவியுமுன்றன்
கீர்த்தியேபேசாமல்வீணர்தம்பொய்ப்புகழ்
கிளத்துமிழிநாவுமுடையேன்
வாளாவருந்தக்கலிப்பேய்பிடித்தலின்
மயங்கினேனினியேனுமுன்
வனசபதவுகளொருபொழுதுமறவாமோன
வாழ்வுபெறுமாறுபுரிவாய்
மாளாதசித்தர்வருமதுரையம்பாக்கத்தில்
வாழ்விசுவநாதனிடபால்
வதிதருமகாமாட்சிதகுகொலுவிலேயாட்சி
மருவியவிசாலாட்சியே. (ச)

அகவற்பா.

ஆட்சியிவ்வுலகமடங்கலும்புரியு
மாட்சிபெற்றுளபெருமன்னவரெனினும்
பொருவரும்வேதப்பொருள்பலதேர்ந்து
வருவனதெரிந்துசொல்வண்மையரேனுந்
தம்முயிர்போல்வதரணியிற்பலவாச்
செம்முயிரினமெனச்சிந்தையிலுன்னி
யெவ்வுயிரினுக்குமிடர்செயாவிரதம்
வெள்வுநராகிமனமொழிமெய்யா

லுன்றனைவழிபட்டுனையலதொருபொருள்
சென்றடைவதற்குந்தெரியவுமிலையெனு
முறுதிகொண்டிலரேலுலகினிலவரைச்
சிறுகொதுகென்றுஞ்சிந்தைசெய்யாப்
பெருமையென்றனக்குறப்பேணியாண்டுன்
றிருவடிநீழற்சேரவும்புரிவாய்
மதுரைப்பாக்கமாநகரீசன்
வதுவைக்கோலமனமகலாமற்
கொண்டவராகிக்குலவுமெய்யடியார்
வண்டகையறிவின்மாந்தருண்மதுவே. (ரு)

முற்றிற்று.

வாழி வெண்பா.

வாழ்கமதுரைப்பாக்கம்வாழ்கவிசாலாட்சியுமை
வாழ்கவிசுவேசமாதேவன்-வாழ்க
கணநாதன்கந்தன்கருதுமடியார்
குணநீடிவாழ்ககுளிர்ந்து.

தெய்வமே துணை.

சிவமயம்.

# ப தி க ம்.

## காப்பு.

### வெண்பா.

வாரமிகும் பத்தர்பலர் வாழ்மதுரைப் பாக்கத்து
வீரபத்திரன்பதிகம் விள்ளுகின்றேன்-காரதெனை
மும்மதநீர் சிந்தி முனிவோ ருளத்துலவுங்
கைம்மலையே முன்னின்று கா.

### கலிவிருத்தங்கள்.

கொண்டன்மே னியன்முதற் குறித்துக் கூறிடு
மண்டரை வேள்வியி லடக்கு வானிட
மண்டலம் புகழ்தரு மலய மால்வரை
வண்டமிழ் மணங்கமழ் மதுரைப்பூக்கமே. (க)

தக்கனைத் தடிந்துசெந் தழலிற் சென்னியிட்
டக்கணத் தசத்தலை யமைத்து ளானிடந்
திக்கடங் கலும்புகழ் சீர்த்தி மேவிய
மக்கண்மிக் குறைதரு மதுரைப் பாக்கமே. (உ)

ஈன்ருக் கெமனிக ரியற்கை யாளருக்
கானநல் வரந்தரு மமல ஞரிடங்
கானவண் டிசைபயில் கவின்கொள் காவிடை
வானவ ராடிடு மதுரைப் பாக்கமே. (ந)

அத்தியிற் புலியினி லதள்கொண் டாடக
வத்திரர் நாணுற வணைந்து ளானிடந்
துத்திவா ளரவல்குற் ரேருகை மார்குழன்
மைத்திரள் வரச்செயு மதுரைப் பாக்கமே. (ச)

ஒண்டுவ ரிதழ்நல முடைய பத்திரை
கண்டுகண் களிப்புறுங் கவினு ளானிடங்
குண்டுநீர்த் தடங்தொறுங் குவளைச் செய்தொறு
மண்டுகம் பாடிய மதுரைப் பாக்கமே. (ரு)

ஆயிரந் தலையிரண் டாயி ரங்கர
மேயிலங் குறுமவன் விரும்பி வாழிடங்
கோயிலு மாடமுங் குளிர்ந்த சோலையு
மாயிரும் புகழ்தரு மதுரைப் பாக்கமே. (சா)

வெண்மைநீ றணிந்துநல் விரதம் பூண்டவ
ருண்மைகண் டருள்செயு மொருவ ஞேங்கிடம்
பெண்மையுற் றவர்களும் பிறவி நோய்தவிர்
வண்மைநோன்புறத்தகு மதுரைப்பாக்கமே, ()

முன்றிறல் விசையன்முன் முருட ைமெனப்
பன்றியால் வழக்கிடும் பரமன் பற்றிடங் [ம்
கொன்றிரை நுகர்பொலார் குலேயப் போர்பொரு
வன்றிரட் படையுறு மதுரைப் பாக்கமே.. (அ)

ஆனைமா முகத்தனை யயிற்கை வீரனை
மேனைதன் மகள்பெற விதித்து ளானிடங்
தேனைவாய் மொழிகொடுசெகுத்துக்கண்களான்
மானைவென் றவர்மிகு மதுரைப் பாக்கமே. (கூ)

மால்வணங் கிடவரம் வழங்கி வண்டமிழ்
நால்வர்சொற் றுதிக்கவி நயந்து ளானிடஞ்
சேல்வளர் தடம்வப றெருக்கண் மாதர்கை
வால்வளைத் தொனிதரு மதுரைப் பாக்கமே. ()

மந்தமா ருதம்வரு மதுரைப் பாக்கமுஞ்
செந்தகை வீரபத் திரனுஞ் சேர்தரப்
பைந்தமிழ்ச் சாலியம் பதியினுன்பக
ரிந்தவாசகஞ்சொல்வார்க்கின்பமெய்துமே. (கக)

முற்றிற்று.

குருபாதமேகதி.

உ

ஸ்ரீமந்நாராயணாயநம:

# பதிகம்.

## காப்பு.

### நேரிசை வெண்பா.

வளமதுரைப் பாக்கத்து மாயாவு தாரா [ளத்த
களவுகொண்டுவெண்ணெயுண்டகண்ணா - பளப
சக்கரக்கை மாயவனே சங்கூதுந் தாடாளா
தக்கபுகழ்ச் சீரெனக்குத் தா.

### வெண்டளைக் கலிப்பாக்கள்.

அத்த முழைத்திங் கடியேன் படுந்துயர
மித்தனையுந் தேர்ந்து மிரங்கா விதம்யாதோ
முத்தர் விரும்பியவா மூவாப் பணிபுரியும்
பத்தர் மிகுமதுரைப் பாக்கத்து மாயவனே. (க)

எல்லவர்க்கு மோர்துணைநீ
யென்றுணர்ந்த யானுமிங்கு
கல்லனைய நெஞ்சினர்பாற்
கைவிரித்து நிற்பேனோ

கொல்ல மனந்துணியாக்
　கொள்கையினேர் கூறுமெண்ணில்
பல்லவத்தா னேமதுரைப்
　பாக்கத்து மாயவனே. (உ)

சேயபுகழ்ப் பாஞ்சாலி
　சிந்தைநொந்து வாடுமென்று
நீயளித்த பேறுணர்ந்து
　நெஞ்சமெலிந் தஞ்சுகின்றே
ஞயர் குலத்தேற
　யாயிரம்வாய்ப் பாம்பாய
பாயலுடை யாய்மதுரைப்
　பாக்கத்து மாயவனே. (௩)

இச்சைவழி போயிங்
　கிளைக்குந் தமியேன்வாய்க்
கொச்சைமொழிக் காசைகொண்டாய்
　கோதொழித்தாட் கொள்வாயோ
செச்சைபொரு மேனித்
　திருவா ழூரம்படைத்த
பச்சைமுகி லேமதுரைப்
　பாக்கத்து மாயவனே. (௪)

நாரணனென் பார்மொழியு
நண்ணு வொருவனேயுஞ்
சீரவிரும் வைகுந்தஞ்
சேரும்வண்ணஞ் செய்திலேயோ
காரமரும் வானளந்தோர்
காலாற் கடலுடுத்த
பாரளந்தோ னேமதுரைப்
பாக்கத்து மாயவனே. (௫)

ஏயுஞ் சிவன்றவத்தா
லீடில்புகழ்ச் செவ்வேளா
நீயுதித்தா யென்கை
நிசந்தானோ பொய்தானோ
வாயுங் கமல
மலர்முகையை வாளையினம்
பாயும் புனன்மதுரைப்
பாக்கத்து மாயவனே. (௬)

வஞ்சமின்றி நாளும்
வழுத்துந் தமியேனுக்
கஞ்ச லளித்தா
யருட்பே றளியாயோ

செஞ்சரணப் போதைச்
சிறிது மறவாத
பஞ்சவர்தூ தாமதுரைப்
பாக்கத்து மாயவனே. (எ)

ஆனே யழைக்க
வருள்புரிந்த வீறதனைத்
தேனே நிகர்தமிழாற்
செப்புநலம் பெற்றிலனே
* கோனே யளித்தவன்கைக்
கொண்டுதிரி கின்றகரிப்
பானேபுரந் தாய்மதுரைப்
பாக்கத்து மாயவனே. (அ)

தூணி லிருந்தொருவன்
சோரியுண்ணத் தோன்றியதான்
மாணிழந்தா யென்றிகழும்
வஞ்சரஞ்ச வாழ்வேனே
வாணிலவு காண்டீபன்
வண்மைத்தேர் மாவுகைக்கும்
பாணிமுகுந் தாமதுரைப்
பாக்கத்து மாயவனே. (கூ)

---

* கோன் - இடையன் - அதாவது தநிபாண்டன்.

எந்த விதமு மெளியே னினைத்தபடி
யிந்த வுலகி லிலங்கவர மீந்தருள்வா [சொற்
யந்தண் பொழிற்குருகை யாழ்வான் முதலோர்
பைந்தமிழா னேமதுரைப் பாக்கத்துமாயவனே.

ஆசகன்ற பேறுதவு மக்கரமெட் டுங்கருதிப்
பாசமறுப் பார்மதுரைப் பாக்கத்து மாயவனை
நேச மலிந்ததிரு நெல்வேலி யூர்ப்புலவன்
பேச லுணர்வார் பெறற்கரிய பேறிலையே. (கக)

முற்றிற்று.

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

சென்னை-600 028.
179710